**STC.No. 11/2025**
**in Cr.No.229/2023**
**Paradharami PS**
**உத்தரவு நாள்: 13.06.2026**

எதிரி மீது பிரிவு 283 IPC r/w 11 TNP Act-ன் கீழ் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது சிறு வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்களானது Summon Case விசாரணை வழக்காகும். இந்த வழக்கானது 2025 ஆம் ஆண்டு முதல் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்படாமல் இவ்வழக்கு ஒரு வருடத்திற்கு மேலாக எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் நிலுவையிலிருந்து வருகிறது. அரசுத் தரப்பில் எதிரிக்கு அழைப்பாணையை சார்வு செய்ய இதுநாள் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. போதிய கால அவகாசம் இருந்தும், எதிரிக்கு அழைப்பாணையை சார்வு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வழக்கை நடத்துவதற்கு அரசுத்தரப்பில் நடவடிக்கை எடுக்காத நிலை இவ்வழக்கில் உள்ளது. மேலும் இந்த வழக்கானது அழைப்பாணை வழக்குகள் படி விசாரணை செய்யப்பட வேண்டிய வழக்காகும். அரசுத்தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜரான காவல்துறை அலுவலர்களிடம் போதிய அறிவுரை வழங்கிய பின்னரும் எதிரியை ஆஜர்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே குற்றத்தின் தன்மை மற்றும் அரசுத் தரப்பில் நடவடிக்கை எடுக்காத நிலை ஆகியவற்றை கருத்தில்கொண்டு பிரிவு 258 கு.வி.மு.ச. படி இந்த வழக்கின் மேல் நடவடிக்கையை நிறுத்தி வைத்து வழக்கிலிருந்து எதிரியை விடுவித்தும் உத்தரவிடப்படுகிறது.

//உண்மை நகல்//

R SARANYA

Digitally signed by R SARANYA

நீதித்துறை நடுவர்,
குடியாத்தம்.